முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (04.09.2025) கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

4 ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகளுக்கு ரூ. 1945.15 கோடி சிறப்பு ஊக்கத் தொகை வழங்கல்!

மோகனூர் சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி!

அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

நாமக்கல் செப். 5 -

நாமக்கல் மாவட்டம், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வடிப்பாலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி துவக்க விழா நடைபெற்றது.

விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்கா மூர்த்தி தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி, சர்க்கரைத் துறை இயக்குநர், த.அன்பழகன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணியை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.

விழாவில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது,

நாமக்கல் மாவட்டத்தில் கீழூர், மேலூர், கெடமலையை இணைக்கும் வகையில், போதமலையில் சாலைகள், இராசிபுரம் தொகுதியில் புதிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள் அந்த வகையில், விசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான மோகனூர் சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்தியை அதிகரிப்பது நமது தலையாய கடமையாகும். கூட்டுறவுத்துறையின் உண்மையான உழைப்பாளர்கள் என்றால், இங்கு பணியாற்றும் பணியாளர்கள் தான். உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்காக நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும். எனவே இத்திட்டத்தினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறையில் இயங்ககூடிய முதல் எத்தனால் ஆலை என்ற பெருமையை பெற்று இந்த எத்தனால் ஆலை ரூ.1400 இலட்சத்தில் வடிவமைக்கப்பட்டு 1993-ல் உற்பத்தியைத் துவங்கியது. இந்த எத்தனால் ஆலை நாளொன்றுக்கு 30,000 லிட்டர் எத்தனாலும், 10,000 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட எத்தனாலும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இந்த எத்தனால் சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் அடிப்படை தேவையான கரும்பஞ்சாறு கசண்டு மூலம் எத்தனால் தயாரிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 70,000 டன்கள் கரும்பஞ்சாறு கசண்டு தேவைப்படுகிறது. இந்த ஆலையில் கிடைக்கும் கரும்பஞ்சாறு கசண்டு பயன்பாடு போக, தேவைப்படும் கரும்பஞ்சாறு கசண்டு இதர கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலையிலிருந்து கொள் முதல் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.10.2024 அன்று நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்த போது எத்தனால் ஆலையின் உற்பத்தி திறனை மேம்படுத்தும் பொருட்டு ரூ.6.67 கோடி செலவில் ஆலை மேம்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், மோகனூர் கூட்டு றவு சர்க்கரை ஆலையில் எத்தனால் உற்பத்தி அலகு மேம்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆலை யின் உற்பத்தி திறன் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக அதிகரிக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரும்பு விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று டன் ஒன்றுக்கு ரூ.750/- உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

மேலும் அரசின் கரும்பு உற்பத்திக்கான சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/- வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2024-2025-ம் ஆண்டு 74,270 டன்கள் கரும்பு அரவை செய்யப் பட்டு சுமார் 1004 விவசாயிகளுக்கு ரூ.23.47 கோடி ரூபாய் கரும்பு கிரயத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசின் கரும்பு உற்பத்திக்கான சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/- வீதம் ரூ.2.58 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆலையின் மூலம் கரும்பு பயிரிடும் விவசாய அங்கத்தினர்களுக்கு 2025-2026-ல் புதிய ரக கரும்பு நடவிற்காக மத்திய மற்றும் மாநில அரசு மூலம் மானியத் தொகை வழங்கப்பட்டு அக்டோபர் 2025 முதல் புதிய கரும்பு ரகங்கள் நடவு செய்யப்பட உள்ளது.

மாநிலம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.1145.12 கோடி, வழிவகை கடன் ரூ.800.03 கோடி என ரூ.1945.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் இவ்வளவு தொகை வழங்கிய பெருமை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சேரும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் மற்றும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் 5 அங்கத்தினருக்கு ரூ.1,75,000/- மதிப்பீட்டில் மாதிரி வயல் மானியத் தொகை மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மானியத் தொகையினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் / செயலாட்சியர் இரா.குப்புசாமி, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் பெ.நவலடி, அட்மா இயக்குநர் ஏ.பி.ஆர். சண்முகம், கரும்பு பெருக்க அலுவலர் அ.சுப்புராஜ் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் செ.முருகம்மாள் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 4 -

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் திருமதி செ.முருகம்மாள் அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் திரு.வி.க நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அவர்களின் தாயார் திருமதி செ.முருகம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

அன்பு காட்டி, அரவணைத்து, ஆளாக்கிய அருமைத் தாயை இழந்து தவிக்கும் தமிழ்வேந்தன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வேலூர் மாநகரம் பழைய காட்பாடி வரதராஜ பெருமாள் கோயில் அறங்காவலர் குழு நியமனத்திற்கான ஆணையை, உதவி ஆணையர் சங்கர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நா.அசோகன் ஆகியோர் வழங்கினர் உடன் உறுப்பினர்கள் நீதி என்ற அருணாசலம், என்.சுகுமார், தேவி ஆகியோர் உள்ளனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட 1வது மற்றும் 16வது வார்டில் உள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் நடைபெற்ற 633 மனுக்கள் பெறப்பட்டு அதில் 16 மனுக்கள் உடனடியாக தீர்வு காணும் வகையில் ஆன்லைன் பட்டா மற்றும் சான்றிதழ்களை அமைச்சர் – மாவட்டக் செயலாளர் ஆர்.காந்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு.சந்திரகலா ஆகியோர் வழங்கினர். இதில் நகராட்சி தலைவர் எஸ்.குல்சார் அஹமத், மேல்விஷாரம் நகராட்சி ஆணையாளர் கோ.பழனி, நகராட்சி துணைத் தலைவர் ஜபர் அஹமத், நகராட்சி பொறியாளர் சரவணன், நகரச் செயலாளர் கே.எம்.இமாயூன் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ரூ.2.20 கோடியில் – புதிய சி.டி.ஸ்கேன் மையம் – 5 புதிய மருத்துவக் கட்டிடங்களுக்கு அடிக்கல்!

தேனி மாவட்டத்தில் ரூ.12.68 கோடியில் 17 மருத்துவக் கட்டிடங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

தேனி, செப்.5 –

தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தேவதானப்பட்டி வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் (03.09.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.2.20 கோடி மதிப்பிலான புதிய சி.டி.ஸ்கேன் மையம் மற்றும் ரூ.12.68 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 17 மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்து, 8 புதிய மருத்துவ கட்டிடங்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்த கட்டிடங்கள் விவரம்,

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட, குமணன்தொழு பகுதியில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் (HSC), கண்டமனூர் பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார நிலையம் (BPHU), இராஜதானி பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் (HSC), காமயகவுண்டன்பட்டியில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சித்தா பிரிவு மையம்,

கம்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலசிந்தலைச்சேரி பகுதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் (HSC), ஓடைப்பட்டி பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார நிலையம் (BPHU), எரசக்கநாயக்கனூர் பகுதியில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் (PHC), கோம்பை பகுதியில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சித்தா பிரிவு மையம்

பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட தேவதானப்பட்டி பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார பொது சுகாதார நிலையம் (BPHC), அழகர்சாமிபுரத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் (HSC), பெரியகுளம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் (UPHC), ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம், பெரியகுளம் அரசு மருத்துவமனையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள யோகா பிரிவு மையம் மற்றும்

போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாலகிருஷ்ணாபுரத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் (HSC) சிலமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் (PHC) ரூ.22.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செவிலியர் குடியிருப்பு, புதிப்புரம், பொட்டிபுரம், சங்கராபுரம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்கள்(HSC) என மொத்தம் ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 17 மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்தார்கள்.

அடிக்கல் நாட்டப்பட்ட புதிய மருத்துவ கட்டிடங்கள் விவரம்,

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட பு.தர்மத்துப்பட்டியில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் (PHC),

கம்பம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்ன ஓவுலாபுரத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் (HSC)

பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட பெரியகுளம் பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் (PHC), அட்டனம்பட்டி, கெங்குவார்பட்டி ஆகிய பகுதிகளில் தலா ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்கள் (HSC),

போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாழையாத்துப்பட்டியில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம்(HSC), குப்பணாசாரிபட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் (PHC), வீரபாண்டி பகுதியில் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு நிலையம் (BPHU) என மொத்தம் ரூ. 6.20 கோடி மதிப்பீட்டில் 8 புதிய மருத்துவ கட்டிட கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.2.20 கோடி மதிப்பிலான புதிய சி.டி.ஸ்கேன் மையத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வுகளில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும், பயனாளிகளுக்கு சித்த மருத்துவ பெட்டகங்களையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் பல்வேறு புதிய மருத்துவ கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடைக்கோடி மனிதருக்கும் மருத்துவ சேவை கிடைக்கவேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மக்களைத்தேடி மருத்துவம் என்ற சிறப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு அரசுத்துறைக்கு ஐ.நா. சபையின் விருது (United Nation Interagency task force Award 2024) கிடைக்கக்கூடிய வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இன்னுயிர் காப்போம்–நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாம், சிறுநீரகத்தை பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மகத்தான திட்டமான நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 1256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்கள் தொடர்ச்சியாக ஜனவரி மாதம் வரை நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களில் தலா 3 முகாம்கள் வீதம் 24 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு, இதுவரை 4 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்களில் ஏறத்தாழ 57,000–க்கும் மேற்பட்டோர் பயன் பெற்று உள்ளார்கள்.

தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்ட தொடக்க விழா நேற்றைய தினம் (02.09.2025) மேகமலை–மணலார் பகுதியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, மேகமலை பகுதிகளில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் செயலாக்க குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 2200–க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்களில் 400–க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்களில் நேரடி ஆய்வு மேற்கொண்டதில், வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் தேனி மாவட்டத்தில் இத்திட்டம் மக்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. மக்களைத்தேடி மருத்துவம் திட்டம் செயலாக்கத்திற்கு பிறகு தமிழ்நாட்டில் தொற்றா நோய்களின் இறப்பு விகிதம் பாதியாக குறைந்துள்ளது.

கடந்த 2007–ஆம் ஆண்டு ஹிதேந்திரன் என்ற மாணவர் விபத்தில் மூளைச்சாவு அடைந்ததையொட்டி, அவரது பெற்றோர்கள் தனது மகனின் உடல் உறுப்பை தானம் செய்ய முன்வந்தார்கள். இச்செயலை அப்போதைய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அம்மாணவனின் பெற்றோரை பாராட்டி, உடலுறுப்பு தானம் என்ற திட்டத்தினை தமிழ்நாட்டில் 2008–ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தனது உடல் உறுப்புகளை தானம் செய்வதாக பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என கடந்த 23.09.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட அன்றே, தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியை சேர்ந்த வருவாய்த்துறையைச் சேர்ந்த அரசு ஊழியர் விபத்து ஏற்பட்டு மூளைச்சாவு அடைந்ததையொட்டி, அவரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதால், அன்னாரின் உடலுக்கு அரசு சார்பில் நேரில் வந்து மரியாதை செலுத்தினேன்.

உடல் உறுப்பு தானம் அளிப்பதில் அரசு மரியாதை பெற்ற முதல் மாவட்டம் தேனி மாவட்டமாகும். இவ்வறிப்பிற்கு பிறகு தமிழ்நாடு முழுவதும் 500–க்கும் மேற்பட்ட உடல் உறுப்பு தானங்கள் பெறப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு, நடப்போம் நலம் பெறுவோம் (Health Walk) திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 8 கி.மீ தூரம் கொண்ட 100 நாள் நடைபயிற்சி முழுமையாக மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேனி மாவட்டத்தில் இன்று (04.09.2025) உடல் உறுப்பு தானம் பதிவு மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு, உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை பெறலாம்.

தேனி மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்றையதினம் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் புதிய சி.டி.ஸ்கேன் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், எம்.ஆர்.ஐ.ஸ்கேன் மையமும் விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது.

தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது. மலைக்கிராம மக்களுக்காக கடந்த 2023 ஆம் ஆண்டு இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் கடந்த 3 ஆண்டுகளில் 20,013 நபர்கள் மாரடைப்பு பாதிப்பிலிருந்து காப்பற்றப்பட்டுள்ளனர். தேனி மாவட்டத்தில் 266 நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் டி.சுப்புலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, இருதய நோய் பாதிப்பு தொடர்பாக கடந்த 2 ஆண்டுகளில் ஒருவர்கூட அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் நோயாளி என்ற வார்த்தைக்கு பதிலாக மருத்துவ பயனாளிகள் என்ற வார்த்தையை பயன்படுத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சிறந்த சுகாதார வசதிகளுக்காக மத்திய அரசின் சார்பில் வழங்கப்படும் லட்சியா விருதினை கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு 82 விருதுகளை பெற்றுள்ளது. இதில் தேனி மாவட்டத்தில் மட்டும் 4 மருத்துவமனைகள் (பெரியகுளம், தேனி, கம்பம், போடி நாயக்கனூர் அரசு மருத்துவமனை) இவ்விருதினை பெற்றுள்ளது.

தேசிய தர நிறுவனத்தால் 2012 – ஆம் ஆண்டு முதல் National Quality Assurance Standard (NQAS) விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2012 முதல் 2021 ஆண்டு வரை 10 ஆண்டுகளில் 69 விருதுகளை மட்டுமே தமிழ்நாடு அரசு பெற்றிருந்தது. தற்பொழுது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த நான்கரை ஆண்டுகளில் 755 மருத்துவமனைகளுக்கு NQAS சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதில் 4 சட்டமன்ற தொகுதிகளை மட்டுமே கொண்ட தேனி மாவட்டத்தில் 13 அரசு சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு தேசிய தர நிர்ணய திட்ட விருது கிடைக்கப்பெற்றுள்ளது பாராட்டுதலுக்குரியதாகும்.

மேலும், ஒன்றிய அரசு ஏறத்தாழ 1600 மேற்பட்ட விருதுகளை பல்வேறு தலைப்புகளின் கீழ், தமிழ்நாட்டிற்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளது. குறிப்பாக, தேசிய அளவில் தனியார் மருத்துவமனைகளுக்கு இதுவரை கிடைத்துக் கொண்டிருந்த அங்கீகாரமான NABH (National Accreditation Board for hospitals & healthcare providers) தமிழ்நாட்டிலுள்ள 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு (தேனி உட்பட) கிடைத்திருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

சிறிய மாவட்டமாக இருந்தாலும் மருத்துவ கட்டமைப்பு மிகச்சிறப்பாக செயலாற்றி வரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு என மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துசித்ரா, இணை இயக்குநர்கள் மரு.கலைச்செல்வி (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்), மரு.செந்தில்குமார் (ஆரம்ப சுகாதார நிலையங்கள்), மரு.சந்தோஷ்குமார் (பயிற்சி), மாவட்ட சுகாதார அலுவலர் ஜவஹர்லால், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கிறிஸ்டோபர்தாஸ், வட்டார மருத்துவ அலுவலர் (தேவதனாப்பட்டி) மரு.கோமதி, வட்டாட்சியர் திரு.மருதுபாண்டி, செயல் அலுவலர் திரு.குணாளன், திட்டக்குழு உறுப்பினர் நாராயணப்பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலட்சுமணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காழி.கலைவாணன் ஏற்பாட்டில் சீர்காழியில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பேசினார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தஞ்சை மண்டல பொறியாளர் அணி பொறுப்பாளர் ரவிச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு குமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், சீர்காழி நகரக் கழ